## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.61/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்திரசேகர் | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணய்யா | ஜாதி | : -- |
| வயது | : 47 | கிராமம் | : ராமாபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**01.12.2025**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்துக்கள் என் அப்பா சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரிதான். (**சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்**) என் பாட்டி சொத்தை விற்றுதான் தாவா சொத்தை வாங்கினார். என் பாட்டி சொத்தை விற்றுதான் தாவா சொத்தை வாங்கினார் என்று கிரைய ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை. என் பாட்டி சொத்தை எப்போது யாருக்கு விற்றார் என்றால் 1980ல் என் பாட்டி சீத்தம்மாள் அவரது அக்காவுக்கு விற்றார். ராமாபுரத்தில் விற்றுதான் சூரியநகரத்தில் வழக்கு சொத்தை வாங்கினார். நான் தற்போது சொல்லும் விவரத்தை எனது எதிர்வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து என் அப்பாவின் சுய சம்பாத்திய சொத்து என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. 27.12.2000ல் நானும் என் அப்பாவும் வழக்கு சொத்தை வாதி கிரிக்கு கிரைய ஒப்பந்தம் செய்தோம் என்றால் கிரைய ஒப்பந்தம் செய்தோம். ஆனால் நிலத்தை விற்பதற்காக செய்யவில்லை. என்ன தொகைக்கு கிரைய ஒப்பந்தம் செய்தோம் என்றால் ரூ.3 லட்சம் ஆகும். கிரைய ஒப்பந்த தேதியில் எவ்வளவு தொகை வாங்கினோம் என்றால் ரூ.2,35,000 வாங்கினோம். அதை கடனாகதான் வாங்கினோம். மீதி கிரைய தொகை ரூ.65,000ஐ ஒப்பந்த தேதியில் இருந்து 3 வருடத்திற்குள்

பெற்றுக்கொண்டு கிரைய ஆவணம் எழுதி கொடுக்க வேண்டும் என்றுதான் சரத்து உள்ளது என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தத்திற்கு பிறகு வாதி என்னிடமும் என் அப்பாவிடமும் மீதி பணத்தை பெற்று கொண்டு கிரைய ஆவணம் எழுதி கொடுக்க கேட்டார் என்றால் நாங்கள் கடனாகதான் தொகை பெற்றோம். கிரையம் ஒப்புக்கொண்டிருந்தால்தானே மீதி தொகையை வாங்குவோம்.

3. நான் கிரைய ஒப்பந்தம் தான் செய்து கொண்டோம் என்றாலும் கடனாக தொகை பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 21.03.2003ல் வாதி எனக்கும் என் அப்பாவுக்கும் கிரைய ஒப்பந்தப்படி கிரைய ஆவணம் எழுதி கொடுக்க கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் என் அப்பா வாங்கியிருப்பார். நான் வாங்கவில்லை. நானும் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக மாற்றி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும் என் அப்பாவும் எங்கள் வழக்கறிஞர் மூலம் 20.05.2003ல் பதில் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் எனக்கு தெரியவில்லை. என் அப்பாதான் அனுப்பியிருப்பார். என் அப்பா 21.05.2003ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அப்பா இறந்த பின்பு வாதி எனக்கும் என் அப்பாவின் வாரிசுகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அனுப்பினார்.

4. நாங்கள் அனுப்பிய பதில் அறிவிப்பில் கிரைய ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டுள்ளோம் என்றாலும் அடமானத்தை மீட்ட பின்பு கிரையம் பதிந்து கொடுக்க கால அவகாசம் கேட்டிருந்தோம் என்றாலும் என் அப்பா அனுப்பியிருப்பார். சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.100/2003ஐ வாதி எங்கள் மீது கிரைய ஆவணம் பதிந்து கொடுக்க கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அ.வ.எண்.100/2003ல் நான் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.100/2003 வழக்கு யாருக்கு சாதகமாக முடிந்தது என்றால் கிரிக்கு சாதகமாக முடிந்தது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1தான் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.100/2003ன் தீர்ப்புரை என்றால் எனக்கு தெரியவில்லை. மீதி தொகை சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

5. வாதி திருவள்ளூர் சார்பு நீதிமன்றத்தில் நிறைவேறுதல் மனு எண்.156/2008 தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் மாமாதான் வழக்கை பார்த்து கொண்டார். எனக்கு மேற்படி விவரங்கள் தெரியும் என்றாலும் நான்

வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முழு விவரம் தெரிந்து கொண்டு வழக்கை மேல் நடத்தாததால் 25.01.2010ல் வாதி சொத்து நீதிமன்றம் மூலம் வா.சா.ஆ 2 கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு விவரம் அப்போது தெரியாது. வாதி நிறைவேறுதல் மனு எண்.68/2018ஐ தாக்கல் செய்து வழக்கு சொத்தை ஒப்படைப்பு பெற்றார் என்றால் எனக்கு தெரியாது.

6. நிறைவேறுதல் மனு எண்.68/2018ல் எனக்கும் மற்ற எதிர்மனுதாரர்களுக்கும் அழைப்பாணை சார்வாகியுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக தெரியவில்லை என சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 26.04.2019ல் வாதி நீதிமன்ற அமீனா, VAO முன்னிலையில் வழக்கு சொத்தை சுவாதீனம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் யாரும் வரவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3தான் ஒப்படைப்பு கட்டளை என்றால் வழக்கு சொத்திற்கு யாரும் வரவில்லை. நான் வழக்கு விவரங்கள் தெரிந்து கொண்டு எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுவாதீனம் ஒப்படைத்த நாள் முதல் இதுவரை வாதி தான் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும் வாதிதான் விவசாயம் செய்து வருகிறார் என்றாலும் இல்லை.

7. நான்தான் வழக்கு சொத்தின் அனுபவத்தில் உள்ளேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் அனைத்தையும் அவர்கள் மாற்றிவிட்டார்கள். எங்களிடம் ஆவணங்களே இல்லை. விவசாயம் மட்டும் செய்கிறோம். விவசாயம் செய்வதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வாதிதான் இன்றுவரை விவசாயம் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை வாதி ஒப்படைப்பு பெற்று 31.07.2019ம் தேதி உழவு செய்த போது நான் என் சகோதரிகள் வந்து வாதியிடம் பிரச்சனை செய்தோம் என்றால் வாதி வழக்கு சொத்திற்கே வரவில்லை. நாங்கள் பிரச்சனை செய்யவில்லை. வாதி இதுதொடர்பாக திருத்தணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம்.

8. இதுதொடர்பாக திருத்தணி காவல் நிலையத்தில் எங்களை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. திருத்தணி காவல் நிலையத்தில் எங்களை விசாரணை செய்தார்கள் என்றாலும் நாங்கள் பிரச்சனை செய்யமாட்டோம் என ஒப்புக்கொண்டு எழுதி கொடுத்துவிட்டு தற்போது வீணாக பிரச்சனை செய்து

வருகிறோம் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் உரிமையியல் நீதிமன்றத்தை அணுக சொல்லி அறிவுறுத்தினார் என்றாலும் எனவே இந்த வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் திருவள்ளூர் வழக்கின் மீது உயர் நீதிமன்றத்தில் நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தற்போது வழக்கு சொத்தின் பட்டா, சிட்டா, வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் வாதி பெயருக்கு போய்விட்டது.

9. திருவள்ளூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.100/2003ஆனது 06.11.2007ல் தீர்ப்பானது என்றால் ஆமாம். திருத்தணி சார்பு நீதிமன்றம் மூலம் வழக்கு சொத்து சுவாதீனம் ஒப்படைத்த பின்புதான் 2019ல் நாங்கள் மேல்முறையீடு சென்றோம் என்றால் ஆமாம். சுமார் 12 ஆண்டுகள் கழித்துதான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காலதாமத மனு IA No.3/2019 என்ன ஆனது என்றால் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காலதாமத மனு IA No.3/2019 தள்ளுபடி ஆன உத்தரவு மற்றும் உத்தரவாணைதான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் உத்தரவு மற்றும் உத்தரவாணை வா.சா.ஆ 11 மற்றும் வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

10. திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காலதாமத மனு IA No.3/2019 உத்தரவு மற்றும் உத்தரவாணையை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் மேல்முறையீடு தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு மேல்முறையீடு தாக்கல் செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. திருவள்ளூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.100/2003 நடந்த விவரமே தெரியாது என நான் பொய்யாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அந்த வழக்கை என் அப்பா இறந்த பின்பு என் மாமாதான் நடத்தி வந்தார். என் மாமா இறந்த பின்பு எனக்கு எந்த விவரமும் சரியாக தெரியவில்லை.

11. திருவள்ளூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.100/2003 வழக்கில் என் மாமா தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் என் மாமாவிற்குதான் தெரியும் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கு சொத்தை நிறைவேறுதல் மனு எண்.68/2018ன்படி முறையாக ஒப்படைப்பு பெற்று

அனுபவித்து வருகிறார் என்றாலும் அதை ஆட்சேபணை செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. முறையாக சாட்சிகள் முன்னிலையில் டாம்டாம் செய்யப்பட்டு ஒப்படைப்பு பெறப்பட்ட வழக்கு சொத்தை வாதி அனுபவித்து வருகிறார் என்றாலும் நாங்கள் வீணாக வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. ஒப்படைப்பு கட்டளையில் சாட்சி கையெழுத்து செய்துள்ள ராமமூர்த்தி, பாப்பையா நாயுடு எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)